7th August 1965]

திரு. ம. கமலநாதன் : கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்தின் கீழ், அங்கே உள்ள விவசாய சங்கத்தினிடமிருந்து அதிகப்படியான ஸ்பெஷல் ரேட்டை ரத்து செய்யக் கோரி ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்காக தனிக் கேள்வி வேண்டும்.

Palani Hills Wild Life Association

* 117 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Scheme and the amount spent on the expansion of Palani Hills Wild Life Association?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No proposal or scheme is under consideration for expansion of the Palani Hills Wild Life Association. The Association has also not sent any proposal. Hence, no expenditure has been incurred in this behalf.

நகராட்சி மன்றங்களின் ஆட்சி மொழி

*118 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களில் தமிழில் நிர்வாகம் நடத்துவதற்கான புதிய உத்திரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்கள் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்குப் பொருத்தமான துணை விதிகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளலாமென்று அவைகட்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள் பின்பற்றக்கூடிய மாதிரித் துணை விதிகளையும் தயாரித்துப் பின்பற்றப்படுவதற்காக அவைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாதிரித் துணை விதிகளின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

நகரசபைகளின் வருமானம்

* 119 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபைகளின் வருமானத்தை அதிகரிப்பது எப்படி என்று ஆலோசனை கூற அரசாங்கம் ஏதேனும் கமிட்டி அமைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

---

* 434-ம் பக்கத்தில் III-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

THE HON. SRI S. M. A. MAJID : (a) No.

(b) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, நகரசபை, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான வருமானம் கொடுப்பது சினிமாக்களின் மூலம் வருகிற 'என்டர்டைன்மெண்டு டாக்ஸ்' தான். ஆகவே, அவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே இருக்கும் நிபந்தனைகளை கொஞ்சம் 'ரிலாக்ஸ்' செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகரசபை வருமானத்தை உயர்த்துவது சம்பந்தப்பட்ட கேள்வி இது. அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்பொழுது இருக்கிற நகரசபைகளின் வருமானம் மிகவும் குறைவாக இருந்துகொண்டிருப்பதால், அவர்கள் அடிக்கடி அரசாங்கத்தை கடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நகர சபைகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலே, அவைகள் சினிமா கொட்டகைகள் வைத்து நடத்துவதற்கும், பெட்ரோல் பங்குகள் வைத்து நடத்துவதற்கும் முன் வந்தால், அதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து, அதன் மூலம் நகரசபைகளின் வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு அனுமதி கொடுக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி உத்தேசம் சர்க்காருக்கு இப்போழுது இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பல நகராட்சி மன்றங்கள் போதுமான அளவுக்கு வருமானம் இல்லாமல் தங்களுடைய செயல்களை நிறைவேற்ற இயலாமல் தவித்துக்கொண்டிருப்பதை நாம் நன்றாக உணர்வோம். அவைகள் தங்களுடைய வருமானத்தை பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற கருத்து அடிப்படையில், அதற்காக தனிக் குழு அமைக்க அரசாங்கம் முன் வராவிட்டாலும், அவைகளுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏதாவது திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா ? எந்த வகையில் நகராட்சி மன்றங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மத்திய சர்க்கார் அளவிலே ஒரு கமிட்டி போட்டு எப்படி நகராட்சி மன்றங்கள் தங்களுடைய வருமானத்தை உயர்த்திக்கொள்வது என்பதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து தங்களுடைய முடிவை ஒவ்வொரு ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கும் அனுப்புவார்கள். அந்த முடிவுகள் அடிப்படையில் ஸ்டேட் லெவலில் ஏதாவது கமிட்டி அமைக்க வேண்டுமா என்பதை பின்பு முடிவு செய்யலாம்.